# மருதநில மக்களின் தொழில்கள்

*பொ. அருள்*
முனைவர் பட்ட ஆய்வாளர்
கணேசர் கலை அறிவியல் கல்லூரி, மேலைச்சிவபுரி

மலர்: 4
இதழ்: 3
மாதம்: ஜனவரி
வருடம்: 2020
P-ISSN: 2454-3993
E-ISSN: 2582-2810

மருதநிலப் பாடல்களில் நடவுத்தொழில், உழவுத்தொழில், மேய்த்தல் தொழில், உழவர்கள் நெற்கதிர்களை அரிதல், மீன் பிடித்தல், தூண்டில் போட்டு மீன் பிடித்தல், வைக்கோலைப் பிரித்துக் காயவைத்தல், ஆடை வெளுக்கும் புலத்தியின் தொழில், மீன் பிடிக்கும் முறை முதலான தொழில்கள் சிறப்பித்துக் கூறப் பட்டுள்ளன. இவற்றுள் வேளாண் தொழிலே மருத நிலத்தில் சிறந்து விளங்குவது. ஏனெனில் மருதம் என்பது வயலும் வயல் சார்ந்த பகுதி என்பதால் இத்தொழில் சிறப்புடன் காணப்படுகிறது.

## உழவுத்தொழில்

நம் நாட்டின் முதன்மைத் தொழில்களுள் ஒன்று வேளாண்மை. இதனால்தான் இந்தியாவின் முதுகெலும்பு வேளாண்மை என்றனர். வேளாண்மை சார்ந்து இருப்பதால்தான்,

> **“உண்டி முதற்றே உணவின் பிண்டம்**
> **உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே’’** ***(18.19-20)***

புறநானூற்றுப் பாடல்களாலும்,

> **“உழுவார் உலகத்திற் காணியஃ தாற்றா**
> **தொழுவாரை எல்லாம் பொறுத்து”** ***(குறள்-1032)***

என்னும் குறளாலும்

> **“இரப்போர் சுற்றமும் புறப்போர் கொற்றமும்**
> **உழவிடை விளைப்போர்’’** ***(சிலம்பு.10.151-152)***

எனும் சிலம்பு வரிகள் மூலமாகவும் அறிய முடிகின்றது. இரப்போருக்கும் பிறப்போருக்கும் உணவை விளைவித்துத் தரும் உழவரே உலகின் முதன்மையானவர். ஒரு நாட்டிற்கும் அதன் வளர்ச்சிக்கும் உழவுத் தொழிலே அடிப்படை என்பதைப் பண்டைக் காலச்சான்றோர் அறிந்து இருந்தனர். இத்தொழிலுக்கு நிலம், நீர், விதை, எரு என்பன முதன்மையானதாக அமைகின்றன. பண்டைத்தமிழர் ஐந்து நிலங்களுள் மருதத்தையும் நெய்தலையும் மென்புலமென்றும், குறிஞ்சியும் முல்லையும் வன்புலமென்றும்பகுத்திருந்தனர்.

மருத நிலத்தை "நாடு" என்றும் மற்ற நிலப்பகுதியினைக் "காடு" என்றும் அழைத்தனர். குறிஞ்சி நிலத்தில் உழத்தக்க நிலத்தினை "ஏர்க்காடு" என்றும், உழத்தகாத நிலத்தை "கொத்துக்காடு" என்றும் அழைத்தனர். குறிஞ்சியிலும் முல்லையிலும் உள்ள காடுகளைக் "கொல்லை" அல்லது "புனம்" என்றும், மருத நிலத்திலுள்ள விளைநிலங்களைச் "செய்" என்றும், பழங்கொல்லையை முதை என்றும், சிறிது செய்யப்பட்ட செய் புன்செய் என்றும், நன்றாகச் செய்யப்பட்ட செய் "நன்செய்" என்றும் பெயர் பெற்றன. செய்தல் என்பது திருத்துதல் அல்லது பண்படுத்துதல் என்பதை குறிக்கும். புன்மை என்பது சிறுமையைக் குறிக்கும். கொல்லை என்பது நீண்ட காடாகும். புன்செய் கிணற்று நீர்ப் பாய்ச்சலைப் பெறும். நஞ்செய் என்பது ஏரிப் பாய்ச்சலைப் பெறும். கொள், எள் முதலியன கொல்லைப் பயிராகும். கேழ்வரகு, சோளம் முதலியன புன்செய் பயிராகும். நெல், கரும்பு முதலியன நன்செய் பயிராகும். நஞ்செய்களுள் பழமையானது பழனம் என்றும், போரடிக்கும் களமுள்ளது கழனி என்றும் சொல்லப்படும். இதனை,

> **"பூத்த கரும்பின் காய்த்த நெல்லின்**
> **கழனி ஊரன் மார்பு**
> **பழனம் ஆகற்க என வேட்டேமே"**
> **(ஐங்குறு.4.4-6)**

எனும் பாடல் அடிகளால் அறியலாம். "பண்ணை" என்பது பண்ணப்பட்டது என்னும் பொருளுடையது. வழக்கில் களமர் அல்லது செறுமர் என்னும் பண்ணையாட்கள் குடியிருந்து வேலை செய்யும் பெரிய வயற்பரப்பையே பண்ணை என்பது குறிக்கும். சேர்ந்து ள்ளமையால் சேறு என்றும், வைப்புப் பெற்றமையால் வயல் என்றும் நன்செய் நிலத்திற்குப் பெயர்கள் உண்டு.

புனமாயினும் புன்செய்யாயினும் பண்டைத் தமிழர் மேட்டு நிலப்பகுதியில் பயிர்த் தொழில் செய்ய விரும்பவில்லை. மேடு "சுவல்" என்றும், பள்ளம் "அவல்" என்றும் பெயரினைப் பெற்றன. "மேட்டுப் புன்செய்யை உழுதவனும் கெட்டான்" மேனி மினுக்கியை மணந்தவனும் கெட்டான்" என்னும் பழமொழியால் இதனை அறியலாம். நன்செய்ப் பாசனத்திற்கு ஆற்றுநீர் கிடைக்காத இடங்களுக்குக் கண்ணாறுகளும் கால்வாய்களும் வெட்டி நீர் பாய்ச்சினர். அது முடியாதபோது ஏரிகளை வெட்டினர். ஏர்த் தொழிலுக்கு உதவுவது ஏரியாகும். குளிப்பது குளமாகும். இயற்கையாக உண்டான ஏரி அல்லது குளம் பொய்கையாகும். முல்லை நிலத்தில் புன்செய்ப் பாசனத்திற்குக் கிணறுகளை வெட்டினர். விதைக்கென்று முதற் காய்ப்பையும் சிறந்த மணிகளையும் ஒதுக்கி வைத்தனர். அக்காலத்து மனிதர்கள் பொருளீட்டலை முதன்மையாகக் கொள்ளாமல், உணவு விளைவித்தலையே முதன்மையாகக்கொண்டு இருந்தனர்.

**எருதுவின் பயன்பாடு**

தமிழகத்தில் தொன்றுதொட்டு உழவிற்குப் பயன்பட்டு வருவது எருது வாகும். ஏர்த்தொழிலுக்கு உதவுவதால் காளை எருது எனப்படுகிறது. காட்டிலுரள்ள மாட்டைப் பிடித்து பழக்கி வீட்டு விலங்காக மாற்றி உழவுத் தொழிலுக்குப் பயன்படுத்தியுள்ளனர். எருதின் இன்றியமையாமையை நோக்கியே ஏர்த் தொழிலைப் "பகடு" என்றனர்.

> **"பகடு புறந் தருநர் பாரம் ஓம்பி"**
> **(புறம். 35)**

> **"பகடு நடந்த கூழ்"** **(நாலடி. 4)**

என கூறுவதுக் நோக்கத்தக்கது. “பாண்டி” என்பது எருதுவையே குறிக்கும். அதனால்தான் உழவுத்தொழிலை “பாண்டியம்” என்று அழைக்கின்றனர். இதனை,

> **“பாண்டியஞ் செய்வான் பொருளினும்”**
> ***(கலி 136)***

எனும் பாடலடிகளால் அறிய முடிகிறது. எருதுகளின் நிறம், திறம் பற்றிப் பலவகையாகப் பகுத்து அவற்றுள் நால்வகையைச் சிறப்பாக எடுத்துக் கூறினர். அதுவே முழுப்புல்லை, முக்கால் மயிலை, அரைச் சிவப்பு, கால் கருப்பு எனத் தமிழக நாட்டுப்புற மக்களிடம் பழமொழியாக வழங்கப்படுகிறது. பண்டைய உழவர்கள் அனைத்துப் பயிர் பச்சை வகைகளையும் பருவமறிந்தே உழுது பயிரிட்டு விளைவித்தனர். மாரிக்கால வேளாண்மையைக் “காலம்” என்றும், வேனிற்கால வேளாண்மையைக் “கோடை” என்றும் குறித்தனர். இன்றைய காலத்தில் நடைபெற்றுவரும் வேளாண்மை வினைகள் அனைத்தும் தொன்றுதொட்டே நடைபெற்று வருகின்றதை அறியலாம். கடுவெட்டி களப்புதல், கல் பொறுக்குதல், எருவிடுதல், ஆழ உழுதல், கட்டியடித்தல், பரம்படித்தல் (தாளியடித்தல், பல்லியாடுதல், ஊட்டித்தல், படவிழுத்தல்), புழுதியுணக்கல், விதைத்தல், களையெடுத்தல், காவல் காத்தல், அறுவடை செய்தல், களஞ்சேர்த்தல், சாணையபடைதல் (சூடுபோடுதல், போரமைத்தல்), சாணை பிரித்தல், காயப்போடுதல், பிணையலடித்தல், வைக்கோல் நீக்குதல், களஞ்சியம் சேர்த்தல் என்பன வானவாரிப் புதுக்கொல்லை வேளாண்மை வினைகளாகும். காடு வெட்டி களப்புதல் புதுக்கொல்லை நிலத்திற்கே உரியது. பழங்கொல்லையாயின் உரம் போடுதற்கு எருவிடுதலோடு கிடையமர்த்தலும் குப்பையடித்தலும் நடைபெறும். இத்தகைய உழவுத்தொழில் குறித்த செய்திகள் மருதப் பாடல்களில் பரவலாகப் பயின்று வந்திருக்கின்றன.

## நடவுத் தொழில்

தூங்கலோரியார் எனும் சங்கப் புலவர் பாடிய நற்றிணையின் மருதப் பாடலில் எருமை மாடுகளை உடைமையாகக் கொண்ட உழவன் குறிக்கப்படுகின்றான். அப்பாடலில் நாற்று நடும் உழத்தியரும் சுட்டப்பெருகின்றனர். மலையைச்செய்து வைத்தது போன்ற உயர்ச்சிமிக்க பெரிய நெற்கூடுகளைக்கொண்ட எருமை மாடுகளை உடைய உழவனே! வரால் மீனின் பெரிய துண்டங்களைக்கொண்ட குழம்பினையும் அரிசியால் சமைத்த சோற்றுத்திரளையும் உண்டு மயக்கத்தோடு நின் உழத்தியரோடு நீர் மிக்க நாற்றுகளை நடுவதற்குச் செல்வை.

> ***“மலை கண்டன்ன நிலை புணர் நிவப்பின்***
> ***பெருநெற் பல்கூட்டு எருமை உழவ!***
> ***(நற்.60.1-2)***
>
> ***நீர் உறுசெறுவின் நாறுமுடி அழுத்த, நின்***
> ***நடுநரொடு சேறி ஆயின்”  (நற்.60.6-8)***

என்னும் பாடலடியில் நாற்றுநடும் உழவனும், எருமை மாடுகளை உடமையாகக்கொண்டு உழுவதும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## எருமை மேய்த்தல்

பூதன் தேவனார் பாடிய நற்றிணையின் மருதப்பாடலில் எருமை மாடுகளை மேய்க்கும் மருதநிலச்சிறுவர்களின் தொழில் குறிக்கப்படுகின்றது. ஊரிலுள்ள இளஞ்சிறுவர்கள் அகன்ற தலைகளையுடைய கரிய எருமைகளின் மிக இனிய பாலைக் கறந்து கொள்வதன்பொருட்டு அவற்றின் கன்றுகளைத் தொழுவத்தில்விட்டு வைப்பர். எஞ்சிய எருமைகளின் மேலேறிக் கொண்டு தனியே மேய்த்து வருவர். என்பதை,

**“மன்ற எருமை மலர்தலைக் காரான்**
**இன்தீம் பாற்பயம் கொண்மார், கன்றுவிட்டு,**
**ஊர்க் குறுமாக்கள் மேற்கொண்டு கழியும்’’ (நற்.80.1-3)**

என்னும் பாடலடிகளால் அறிய முடிகிறது. பால் கறந்து விற்று அதன்மூலம் கிடைக்கும் வருமானத்தினை வைத்துத் தங்களுடைய வாழ்வை மேம்படுத்திக்கொள்வதற்காக எருமை மாடுகளை வளர்த்துள்ளனர். போதுமான மேய்ச்சலும் அங்கு இருந்ததால் வளர்ப்புத் தொழில் செய்துள்ளனர்.

### கதிர் அறுத்தல்

பரணர் பாடிய நற்றிணையின் மருதப் பாடலில் நெற்கதிர் அறுக்கும் தொழில் குறிப்பிடப்படுகின்றது. வெண்ணெல்லை அரிகின்ற உழவர்கள் முழக்கும் தண் ணும்மைக்கு அஞ்சி வயலில் உள்ள பலவாகிய பறவை இனங்கள் வயற் பரப்பைவிட்டு அகன்று, ஓடி வயலின் மீது தாழ்ந்து வளைந்த கிளைகளை உடைய மருத மரத்தில் சென்று தங்கும். இதனை,

**“வெண்ணெல் அரிநர் தண்ணுமை வெரீஇ**
**பழனப் பல்புள் இரீய, கழனி**
**வாங்குசினை மருதத் தூங்குதுணர் உதிரும்’’ (நற்.35.1-3)**

என்னும் பாடலடிகளால் அறிய முடிகிறது.

வெண்ணெல் அரிநர் தண்ணுமை முழக்கம் செய்யும் வழக்கத்தை,

**“வெண்ணெல் அரிநர் மடிவாய்த் தண்ணுமை**
**பன்மலர்ப் பொய்கை படுபுள் ஓப்பும்”**
**(அகம். 40.13-14)**

என்னும் பாடலடிகளாலும் அறிய முடிகிறது.

### உழவர்கள் நெற்கதிர்களை அரிதல்

நெல் அரியும் உழவர்கள் நெருப்பு கொழுந்துவிட்டு எரிவது போன்ற தாமரைப் பூக்களின் இடையிடையே விளைந்து சாய்ந்த சிவந்த நெற்கதிர்களை அரிந்து குவிப்பர். அவ்வாறு நெல்லரியும் உழவர்களுக்குக் கள்ளை ஏற்றிக்கொண்டு பலகாலும் வந்து செல்லும் வண்டி சேற்றிலே புதையுமானால், அதன் சூழ்ச்சியைப் போக்குவதற்குச் சிறந்த கரும்புகளை அடுக்கி அடை கொடுப்பர் எனப் பரணர் பாடிய அகநானூற்று மருதத் திணைப் பாடல் குறிப்பிடுகின்றது.

**“எரிஅகைத்தன்ன தாமரை இடையிடை**
**அரிந்துகால குவித்த செந்நெல் வினைஞர்**
**கள்கொண்டு மறுகும் சாகாடு அளந்து உறின்,**
**ஆய்கரும்பு அடுக்கும் பாய்புனல் ஊர”**
**(அகம்.116.1-4)**

என்பது அப்பாடலடிகளாகும். நெற்கதிர் அறுக்கும் உழவர், உழைப்பின் களைப்பைப் போக்குவதற்குக் கள்ளைக் குடிப்பர் என்பதை இதன் வழி அறிய முடிகிறது.

### மீன் பிடிக்கும் தொழில்

மருத நில மக்கள் குளங்களிலும் ஏரிகளிலும் தூண்டில் போட்டு மீன் பிடித்துள்ளனர். இதனை,

**“வானம் வேண்டா வறன்இல் வாழ்க்கை**
**நோன்ஞாண் வினைஞர் கோளரிந்து ஈர்க்கும்**
**மீன்முதிர் இலஞ்சிக் கலித்த தாமரை**
**நீர்மிசை நிவந்த நெடுந்தாள் அகலிலை’’**
**(அகம்.186.1-4)**

எனும் பரணர் பாடல் வழி அறியலாம்.

வலிமையான தூண்டில் கயிற்றை கொண்டு மீன் பிடிப்போர் அத்தொழிலுக்கு இடையூறாக மழை பெய்வதை விரும்பமாட்டார்கள். மீன் இரை கோத்த தூண்டில் முள்ளைப் பற்றியது அறிந்து தூண்டிலை இழுக்கும் மீன் நிறைந்துள்ள நீர் நிலையில் தாமரை தழைத்து வளர்ந்திருக்கும். ஐயூர் முடவனார் பாடிய அகநானூற்று மருதப்பாடலில்

கயிறு கட்டப்பெற்ற நுண்ணிய தூண்டில் கோலினால் மீனைப் பிடிக்கும் பாண்மகள், நீரை அடுத்த கரையில் பிடித்த வரால்மீனை, பன்னாடையால் வடித்து விறகுகொண்டு சுட்டு அவள் வாயில் உண்பிப்பாள் என்னும் செய்தி இடம் பெற்றுள்ளது.

**“நாண்கொள் நுண்கோலின் மீன்கொள் பாண்மகள்**
**தண்புனல் அடைகரைப் படுத்த வராஅல்**
**நார்அரி நறவு உண்டு இருந்த தந்தைக்கு**
**வஞ்சி விறகின் சுட்டு வாய் உகுக்கும்”**

**(அகம். 216.1-4)**

பாணனும் பாண்மகளும் தூண்டில் போட்டு மீன் பிடித்தனர் என்பதை இப்பாடலில் அறிய முடிகிறது.

## ஆடை வெளுக்கும் தொழில்

மருதத்தினையில் அமைந்துள்ள பாடல்களில் ஆடை வெளுக்கும் புலத்தியர் நிலையும் சிறப்பித்துக் கூறப்படுகிறது. கழார்க்கீரன் எயிற்றன் பாடிய குறுந்தொகைப் பாடலில், பனிக் காலத் தில் மலர்வது பகன்றை. இது அகன்ற இலைகளைக் கொண்டது. கொடி இனத்தைச் சார்ந்தது. இதன் மணம் கள்ளின் மணத்தைப் போன்றிருப்பதால் இல்லறப் பெண்கள் தங்களது கூந்தலில் விரும்பி அணிவதில்லை. இதன் மலர் புலத்தி நீரில் தேய்த்து, வெளுத்துப் பசையிடப்பட்ட ஆடையைப் போல வெண்ணிறமாக விளங்கும். புலத்தி முறுக்கிய ஆடை போல பகன்றை மலர் சுரிந்து காணப்படும் எனக் கூறப்பட்டிருப்பது நோக்கத்தக்கதாகும். அப்பாடலடிகள் வருமாறு.

**“நலந்தகைப் புலத்தி பசைதோய்த்து எடுத்துத்**
**தலைப்புடைப் போக்கித் தண்கயத்து இட்ட**
**நீரின் பிரியாப் பரூஉத்திரி கடுக்கும்**
**பேர் இலைப் பகன்றைப் பொதிஅவிழ் வான்பூ”**

**(குறுந்.330.1-4)**

இப்பாடலில் புலத்தி தோய்த்து வெளுத்த ஆடைக்கு பகன்றைப் பூ உவமையாகக் கூறப்பட்டுள்ளது. புலத்தியரின் ஆடை வெளுக்கும் தொழில் அக்காலத்தில் சிறந்து விளங்கியது என்பதனை இதன் வழி அறிய முடிகிறது.

## நெற்கதிரின் போரா பிரித்துக் கடாவிடுதல்

உழவர்கள், தாழ்ந்த கிளைகளை உடைய மருத மரம் தழைத்துச் சிறக்குமாறு அழகு பெற்றுத் திகழும் நீர் சூழ்ந்த நெற்களம் பொலிவுபெறுமாறு நெற்கதிரின் போரைப் பிரித்துக் கடாவிட்டனர். கள்ளுண்டு களித்த உழவர்கள் அக்காளைகளை மாற்றி வேறு காளைகள் கொண்டு மாற்றிக் கடாவிட்டனர். பின்னர் விரைய வீசும் காற்றில் நெல்லைத் தூற்ற, பறந்து சென்ற நெல்லின் தூசும் துரும்பும் அருகிலிருக்கும் உப்பு காயும் உப்பளத்திலுள்ள சிறிய பாத் திகளில் சென்று வீழ்ந்தது, எனப் புலவாயிற் கீரத்தனார் பாடிய மருதத்தினைப் பாடல் குறிப்பிடுகிறது.

**“தாழ்சினை மருதம் தகைபெறக் கவினிய**
**நீர்சூழ்வியன்களம்பொலிய,போர்புஅழித்து**
**கள்ஆர் களமர் பகடுதலை மாற்றி,**
**கடுங்காற்று எறிய, போகிய துரும்புடன்**
**காயல் சிறுதடிக் கண்கெடப் பாய்தலின்,**
**இருநீர்ப் பரப்பின் பனித்துறைப் பரதவர்**
**தீம்பொழில் வெள்உப்புச் சிதைத்தலின்,**
**சினைஇ”**

**(அகம்.366.1-7)**

இச்செய்யுளில் நெற்கதிரின் போரைப் பிரித்துக் கடாவிடுதல், நெல்லின் பொலியைத் தூற்றுதல் முதலான உழவுத்தொழில் சார்ந்த செய்திகள் பேசப்பட்டுள்ளன. மருத நிலமும் நெய்தல் நிலமும் அருகருகே இருப்பது இப்பாடலில் விளக்கப்பட்டுள்ளது.

## விளைக வயலே

“கேள் கேடுன்றவும் கிளைஞர் ஆரவும்” தம் உடைமையைப் பகுத்துக் கொடுத்து

வாழ்வதே இல்வாழ்வார் கடமையாகும். இதற்கு வேண்டிய பொருட் செல்வமும் அதன் பெருக்கமும் உழவுத் தொழிலிலை அடிப்படையாகக்கொண்டதாகும். இதனால்தான் ஐங்குறுநூற்றின் மருதத் தலைவி வயல்விளை வினைப் பெரிதும் வேண்டுகிறாள். ஈதல் இயையாத வாழ்க்கை சாதலுக்கு ஒப்பாகும். என்பதால் இரவலர் வருகையை விரும்புகின்றாள். இதனை,

**"வாழி ஆதன், வாழி அவினி!**
**விளைக வயலே! வருக இரவலர்**
**என வேட்டோளே, யாயே"**
**(ஐங்குறு.2.1-3)**

என்னும் பாடலின் வழி அறிய முடிகிறது.

### பகடு சிறக்க

"பகடு" என்பது உழவிற்குத் துணைசெய்யும் காளை மாட்டையும் உழவுத் தொழிலையும் குறிக்கும். உழவின் ஆக்கத்திற்கு உழுகின்ற காளை மாடுகளும், குடும்ப வருமானத்திற்கு பால் தரும் பசுக்களும் இன்றியமையாதன. பகடுகளின் சிறப்பு நோக்கிப் பண்டைய சான்றோர் வள்ளல்களின் பகடுகளையும் வாழ்த்தியுள் ளனர். இதை ஐங்குறுநூற்றுப் பாடல் மூலம் அறிய முடிகிறது.

**"வாழி ஆதன், வாழி அவினி!**
**பால் பல ஊறுக! பகடு பல சிறக்க!**
**என வேட்டோளே, யாயே: யாமே,**
**ஷவித்திய உழவர் நெல்லொடு பெயரும்,**
**பூக் கஞல் ஊரன் தன்மனை**
**வாழ்க்கை பொலிக எனவேட்டேமே"**
**(ஐங்குறு.3)**

"பகடு" சிறத்தலாவது காளைமாடுகள் எண்ணிக்கையில் பெருகுதலாகும். வித்திய உழவர் நெல்லொடு பெயர்தலாவது, வயலின் முன் விதைத்த உழவர், அது நன்கு விளைந்த பின்னர் பன்மடங்கு நெல் விளைவொடு திரும்புதலாகும். நடுதலும் அறுவடை செய்தலும் என அடுத்தடுத்து கழனிகளில் நிகழும் நிகழ்வினை இப்பாடல் விளக்குகிறது.

### மாரி வாய்க்க

மாரி வறங்கூரின் தேவர்க்குரிய பூசையும் விழாவும் இல்லை. எனவே வசியும் வளனும் சுரக்க மழைவளம் வேண்டி வாழ்த்துவது மரபாயிற்று. இதனை,

**"பசியும் பிணியும் பகையும் நீங்கி**
**வசியும் வளனும் சுரக்கென வாழ்த்தி"**
**(மணி.1.70-71)**

எனச் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் வலியுறுத்துவது சிந்திக்கத்தக்கதாகும். ஐங்குறுநூற்று மருதநிலத் தலைவியும் அவ்வாறே,

**"வாழி ஆதன், வாழி அவினி!**
**மாரி வாய்க்க! வளம் நனி சிறக்க!"**
**(ஐங்குறு.10.1-2)**

என வாழ்த்துகின்றாள். மழையின்றி மாநிலத்து உயிர்களுக்கு நிலைபேறு இல்லை என்பதை உணர்ந்த தலைவி, உலக நன்மை ஒன்றையே கருதி உலக வாழ்வுக்கு இன்றியமையாத மழை வளத்தையும், அதன் விளைவான செல்வச் செழிப்பையும் மட்டுமே விழைகின்றாள். உழவுத்தொழில் சிறப்படைய மழை இன்றியமையாதது என்பது சிறந்த உண்மையாகும்.

### பறை வினைஞர் தொழில்

உழவர்கள் நெற்பயிர்களை வயல்களில் அறுவடை செய்யும்போது, அவர்களுக்குச் சோர்வும் களைப்பும் தோன்றாமல் இருப்பதற்கு "பறை வினைஞர்" பறை கொட்டுதல் பணைய மரபாகும். இதனைப் பின்வரும் ஐங்குறுநூறு மருதப் பாடலின் வழி அறிய முடிகிறது.

**“குறுகுடைத்து உண்ட வெள்ளகட்கு யாமை அரிப்பறை வினைஞர் அல்கு மிசைக் கூட்டும், மலர் அணி வாயில் பொய்கை ஊர’’**

***(ஐங்குறு.81.1-3)***

### மீன் பிடிக்கும் முறை

குளத்தில் மீன் பிடிக்கும் முறையைப் பூங்கணுத்திரையார் என்னும் சங்கப் புலவர் பாடிய குறுந்தொகைப் பாடல்,

**“கடும்புனல் அடைகரை நெடுங்கயத்து இட்ட மீன் வலை மாப் பட்டாங்கு”**

***(ஐங்குறு.171.2-3)***

எனக் குறிப்பிடுகின்றது. புதுப்புனல் குளத்தை அடையும் போது குளத்திலுள்ள மீன்கள், கடும்புனலின் எதிரே செல்ல முற்படும். இதை அறிந்து மீன் பிடிப்பவர் குளத்திற்குப் புதுப்புனல் வரும் வழியில் வலைகளை இட்டுவைப்பர். இது வீசிய வலையன்று. இட்ட வலையாகும். மருத நில மக்களின் மீன் பிடி வாழ்க்கை முறையை மருதத்திணையில் அமைந்துள்ள பாடல்கள் எடுத்துக் காட்டுகின்றன.

மருதநில மக்கள் பிற தொழில்கள் செய்துவந்தாலும் வேளாண்மைக்குக் கொடுத்துள்ள முக்கியத்துவத்தை மருத திணைப் பாடல்கள் சான்று பகர்கின்றன. இதன்மூலம் அவர்களின் தொழில்கள் பண்பாட்டுடன் பின்னிப் பிணைந்திருப் பதையும் காணமுடிகிறது.

### குறிப்புகள்

1. நச்சினார்க்கினியர் உரை, கலித்தொகை, சைவசித்தாந்தம் நூற்பதிப்புக் கழகம், சென்னை.
2. ந.மு.வேங்கடசாமி நாட்டார். ரா.வேங்கடாசலம் பிள்ளை, சைவ சித்தாந்தம் நூற்பதிப்புக் கழகம், சென்னை.
3. க. திலகவதி, சங்க கால மகளிர் வாழ்வியல்,இறையருள் பதிப்பகம், திருச்சி
4. வ.சுப. மாணிக்கம், தமிழ்க்காதல், மெய்ப்பன்பதிப்பகம், சிதம்பரம்.
5. உ.வே.சாமிநாதையர், குறுந்தொகை, சைவசித்தாந்தம் நூற்பதிப்புக் கழகம், சென்னை.
6. www.google scholar.com